# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,374 — 1924 ம் ௵ மாசிமீ 8 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV. — நான்காம் பாகம்.

### காணி விற்பனவுகள்.

**No. 985, N. P.**—1924 ம் ஆண்டு பங்குனிமீ 21 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மறிசுக்கட்டி வங்களாவில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு உதவி கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 4 காணித்துண்டுகள் வடமாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு முதலிய பகுதியில் இருக்கின்றது.

முசலிதெற்கு. பிளான் இலக்கம் 5,574. குறிச்சி—புளியன் குளம். உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கரோன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | தருசுகமம் .. | தி. எஸ்தோகு தீயேசு .. | துறந்த காணி நெல்வேளாண்மைக் கேற்றது | 1 3 14 | 20 |
| | | பிளான் இலக்கம் 5,982. குறிச்சி—புளியன்குளம். உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 1 | தருசுகமம் .. | எம். கிறிஸ்தோகுறெவ்வல்.. | காடும் துறந்த காணும் வேளாண்மைக் கேற்றது | 4 0 8 | 20 |
| | | பிளான் இலக்கம் 5,984. குறிச்சி—புளியன்குளம். உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 1 | புளியன்குளம் .. | எம். மடுத்தீனுசிராய்வ .. | பதிந்த காடு நெல்வேளாண்மைக் கேற்றது | 2 2 39 | 20* |
| 2 | ஷை .. | — .. | வண்டில் பாதைக்காக விடப்பட்ட காணி | 0 0 16 | —† |

* இந்தக்காணிக்கு புளியங்குளத்திலிருந்து தண்ணீர் கொடுபடாது என்ற பொருத்தத்தோடு விற்கப்பட்டிருக்கிறது.
† விற்பனவுக் கல்ல.

இந்தக் காணிகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னார் உதவி ஏசன்றுத்துரையிடத்திலும் பிளான் அளவுகாற பெரியதுரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொளும்பு, 1924 ம் ஆண்டு மாசிமீ 4 ந் வ.

சிசில் கிளமெண்தி,
கொலோனியல் சக்கிறத்தார்.

---

**No. 986, N. P.**—1924 ம் ஆண்டு பங்குனி மாதம் 23 ந் திகதி, ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரிப்பு வங்களாவில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கு உதவி கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 4 காணித்துண்டுகள், வட மாகாணத்து டிஸ்திறிக்கு முசலி பகுதியி லிருக்கின்றது.

முசலி வடக்கு. பிளான் இலக்கம் 6,096. குறிச்சி—அகத்திமுறிப்பு. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கரோன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | மவிலியகமம் .. | எஸ். முகம்மது சுல்தான் .. | துறந்த காணியும் பறட்டைக்காடும் | 1 3 16 | 20 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | முசலிதெற்கு. பிளான் இலக்கம் 6,107. குறிச்சி—சிலாவத்துறை. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | இரணைஓடை .. | எஸ். சேகுதாவூது .. | துறந்தகாணியும் பறட்டைக்காடும் | 1 | 3 | 34 | 25 |
| 2 | ஷை .. | — .. | ஓடைக்காக விடப்பட்ட காணி .. | 0 | 2 | 9 | —* |
| 3 | வெண்காணி .. | என். முகையதீன் சாய்பு மரைக்கார் | துறந்த காணி | 1 | 0 | 5 | 25 |

* விற்பனவுக்கல்ல.

இந்தக் காணிகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னார் உதவி ஏசண்டுத்துரையிடத்திலும் பிளான் அளவுகாற பெரியதுரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1924 ம் ஆண்டு மாசிமீ 4 ந் திகதி.

சிசில் கிளமென்தி,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

**No. 987, N. P.**—1924 ம் ஆண்டு பங்குனி மாதம் 26 ந் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு மன்னாரில் தன் ஆபிசில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக் உதவிக் கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொலப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 35 காணித்துண்டுகள், வடமாகாணத்து மாந்தை, முசலிப் பகுதிகளி லிருக்கின்றது.

நானாட்டான் மேற்கு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பிளான் இலக்கம் 5,563. குறிச்சி—பெரியவெளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | பெரியவெளிக்கமம் .. | பி. அந்தோனிபிள்ளை .. | ஒரு பகுதி துப்பரவுபண்ணப்பட்ட பதிவுகாடு வேளாண்மைக்கேற்றது | 7 | 3 | 1 | 20* |
| 2 | ஷை .. | வி. அந்தோனிப்பிள்ளை கூட்டிப்பிடித்த காணி | நெல்வயல் .. | 0 | 3 | 17 | 36* |
| 3 | ஷை .. | — .. | கட்டுக்காக விடப்பட்ட காணி .. | 0 | 0 | 38 | —† |
| | | | பிளான் இலக்கம் 6,144. குறிச்சி—ஆத்திக்குளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | காட்டுக்காணி .. | டவுளியு. பேதுருப்பிரேரா | நெல்வயல் .. .. | 27 | 1 | 29 | 20* |
| 2 | ஷை .. | — .. | றெயில்றோட்டுக்காக விடப்பட்ட காணி | 1 | 0 | 29 | —† |
| | | | பிளான் இலக்கம் 5,521. குறிச்சி—ஆத்திக்குளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | காட்டுக்காணி .. | டவுளியு. பேதுருப்பிரேரா | புதுதாய்த் துப்பரவுபண்ணப்பட்ட நெல்வேளாண்மைக்கேற்றது | 2 | 3 | 11 | 20* |
| 2 | ஷை .. | — .. | ஒரு றோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 | 3 | 32 | —† |
| 3 | ஷை .. | — .. | றெயில்றோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 | 3 | 20 | —† |
| 4 | ஷை .. | டவுளியு. பேதுருப்பிரேரா | புதிதாய்த் துப்பரவுபண்ணப்பட்டது நெல்வயலுக்கேற்றது | 3 | 2 | 21 | 25* |
| | | | பிளான் இலக்கம் 5,522. குறிச்சி—கோட்டைக்குளம் மாவிலங்கேணி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | கோணமொட்டைக்கமம் | கே. ராமசாமி கூட்டிப் பிடித்த காணி | நெல்வயல் .. .. | 0 | 1 | 28 | 30* |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 1 | 22 | 30* |
| 3 | ஷை .. | கெ. கறுப்பையா கூட்டிப் பிடித்த காணி | ஷை .. .. | 0 | 1 | 34 | 30* |
| 4 | கரம்பைக்காடு .. | கே. கறுப்பையா .. | புதிதாய் துப்பரவுபண்ணப்பட்டது நெல் வேளாண்மைக்கேற்றது | 5 | 3 | 28 | 20* |
| 5 | ஷை .. | — .. | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி | 1 | 0 | 14 | —† |
| | | | பிளான் இலக்கம் 5,526. குறிச்சி—உமநரி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | காட்டுக்காணி .. | எ. பிலிப்புப்பிள்ளை .. | பறட்டைக்காடு .. .. | 13 | 0 | 30 | 20* |
| | | | பிளான் இலக்கம் 5,534. குறிச்சி—பாலைக்குளி. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | சின்னஇலந்தை மோட்டைக்காடு | எம். அந்தோனிப்பிள்ளை .. | பறட்டைக்காடு .. .. | 5 | 0 | 7 | 20* |
| 2 | ஷை .. | — .. | றோட்டுக்காக விடப்பட்ட காணி .. | 0 | 0 | 38 | —† |
| 3 | ஷை .. | — .. | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி | 0 | 2 | 6 | —† |
| 4 | காட்டுக்காணி .. | — .. | ஷை .. | 0 | 2 | 23 | —† |
| 5 | ஷை .. | வி. பிலிப்புப்பிள்ளை .. | காடு .. .. | 7 | 2 | 7 | 25* |
| | | | பிளான் இலக்கம் 5,553. குறிச்சி—பெரியகட்டைக்காடு. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 1 | பட்டியடித்தரை .. | எம். வஸ்தியாம்பிள்ளை .. | காடு ஒருபகுதி வேளாண்மைசெய்யப்பட்டது | 4 | 2 | 24 | 25* |
| 2 | ஷை .. | — .. | றோட்டுக்காக விடப்பட்ட காணி .. | 0 | 2 | 2 | —† |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | காட்டுக்காணி .. | — .. | றோட்டுக்காக விடப்பட்ட காணி .. | 0 | 1 | 5 | —† |
| 4 | ஷ .. | எல். அந்தோனிப் பிள்ளை .. | காடு .. .. | 6 | 0 | 28 | 25* |
| 5 | ஷ .. | சுவாந்துக்குருசு கூட்டிப் பிடித்த காணி | நெல்வயல் .. .. | 0 | 1 | 38 | 30* |
| 6 | ஷ .. | எம். அந்தோனிப்பிள்ளை .. | பறட்டைக்காடு வேளாண்மைக் கேற்றது | 6 | 3 | 29 | 25* |
| 7 | ஷ .. | — .. | வளிக்காக விடப்பட்ட காணி .. | 0 | 1 | 34 | —† |

பிளான் இலக்கம் 5,553. குறிச்சி—பெரியகட்டைக்காடு. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | காட்டுக்காணி ... | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்ட காணி | 1 | 2 | 2 | —† |
| 9 | கண்காணிகமம் .. | எம். கவுரியல்பிள்ளை கூட்டிப்பிடித்த காணி | பறட்டைக்காடும் நெல்வயலும் .. | 0 | 1 | 28 | 30* |
| 10 | ஷ .. | ஷ .. | நெல்வயல் .. .. | 1 | 3 | 27 | 30* |
| 11 | முத்தர்குடா .. | — .. | நெற்காணி .. .. | 0 | 1 | 37 | 25* |
| 12 | வையாளிகமமம் .. | — .. | பறட்டைக்காடு மேட்டுத்தறை .. | 0 | 1 | 25 | 25 |
| 13 | ஷ .. | — .. | ஷ .. .. | 0 | 0 | 20 | 25 |
| 14 | ஷ .. | — .. | ஷ .. | 0 | 0 | 14 | 25 |

முசலி வடக்கு.

பிளான் இலக்கம் 5,542. குறிச்சி—அரிப்பு. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெண்காணி .. | எஸ். எஸ். குருசு .. | துறந்த காணி தென்னம்பிள்ளைக் கேற்றது | 1 | 0 | 8 | 31‡ |

* இத்துண்டுகள் கட்டுக்கரை குளத்திலிருந்து நீர்பாச்சக்கூடியவை. இக்காணிகளை வாங்குவோர்கள் வருஷத்துக்கு ஏக்கருக்கு இரண்டு ரூபாய் வீதம் நீர்வரி கொடுக்கவேண்டும். இவ்வீதம் அரசாட்சியாரால் தேவையான பொழுது மாற்றப்படும்.

† விற்பனவுக்கல்ல.

‡ இந்தத் துண்டு விற்கப்பட்டது ஆனால் மிகுதிக்காசு கட்டாததினால் விற்பனவுக்கு போடப்பட்டிருக்கிறது.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னார் உதவிக் கவண்மேந்து ஏசன்றரிடத்திலும் படங்கள் அளவுக்காரப் பெரியதுரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1924 ம் ஏப்ரல் மாசம் 6 ந் தேதி.

சிசில் கிளமென்தி,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

**No. 988, N. P.**—1924 ம் ஆண்டு பங்குனிமாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு மன்னார் தன் ஆபிசில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக் கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரியதிற் காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 25 காணித்துண்டுகள், வட மாகாணத்து மாந்தை, முசலி, மன்னார் தீவு பகுதிகளிலிருக்கின்றது.

மாந்தை வடக்கு. பிளான் இலக்கம் 5,552. குறிச்சி—பாலைப்பெருமாள் கட்டு. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியினது பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | விகாயடிக்குளம் அல்லது பாலைப்பெருமாள் காடு | அந்தோனி பிலிப்பு .. | பறட்டைக்காடு .. | 4 | 1 | 19 | 25* |
| 4 | ஷ .. | ஷ .. | றோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 | 3 | 10 | —† |

பிளான் இலக்கம் 5,543. குறிச்சி—பறங்கிசாளம்பன். உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மணல்காடு அல்லது கரம்பைக்காடு | — .. | வண்டில் பாதைக்காக விடப்பட்ட இடம் | 0 | 0 | 24 | —† |
| 2 | ஷ .. | ஏ. கே. என். மதாறுசாய்பு.. | துப்பரவுபண்ணப்பட்ட காணி | 10 | 1 | 22 | 22·50* |
| 10 | காட்டுக்காணி .. | கே. நெயினு முகம்மது .. | ஷ .. | 9 | 1 | 22 | 50* |
| 11 | பறங்கிசாளம்பன்வயல் | கே. நெயினு முகம்மது கூட்டிப்பிடித்த காணி | நெல் வயல் .. | 2 | 3 | 28 | 50* |
| 12 | காட்டுக்காணி .. | — .. | வழிக்காக விடப்பட்ட காணி .. | 0 | 0 | 23 | —† |

நானாட்டான் மேற்கு. பிளான் இலக்க 5,938. குறிச்சி—வங்காலை. உருத்தாளி—அரசாட்சியார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெண்காணி .. | எ. அந்தோனி சூசை .. | பறட்டைக்காடு .. | 2 | 0 | 23 | 25 |
| 2 | ஷ .. | எஸ். செபமாலை மாற்கு .. | ஷ .. | 1 | 0 | 28 | 25 |
| 3 | ஷ .. | — .. | ஓடைக்காக விடப்பட்ட காணி | 0 | 3 | 33 | —† |
| 4 | ஷ .. | — .. | கடலுக்கும் ஓடைக்குமாக விடப்பட்ட காணி | 2 | 0 | 38 | —† |

பிளான் இலக்கம் 5,944. குறிச்சி—வங்காலை. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெண்காணி .. | தி. சலமோன் மாற்கு .. | துறந்தகாணி .. | 1 | 0 | 32 | 25 |
| 2 | சின்னமணல்பிட்டி .. | எம். ஆரோக்கிய மாற்கு கூட்டிப்பிடித்த காணி | துறந்தகாணி 8 பனைமரங்கள் உள்ளது | 0 | 0 | 28 | 30 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| | | **பிளான் இலக்கம் 6,086. குறிச்சி—வங்காலை. உரித்தாளி—அரசாட்சியார்.** | | | |
| 1 | வெண்காணி .. | எ. ஞேச்சைக்குலாஸ் .. | துறந்தகாணி .. | 0 0 21 | 30 |
| | | **பிளான் இலக்கம் 6,084. குறிச்சி—வங்காலை. உரித்தாளி—அரசாட்சியார்.** | | | |
| 1 | படுக்காயடிவளத்து .. | எ. மனுவல் குருசை .. | பறட்டைக்காடு .. | 0 3 37 | 35 |
| 2 | டிை .. | — .. | ஓடைக்கரைக்காக விடப்பட்ட காணி | 0 0 16 | —† |
| 3 | டிை .. | — .. | வளிக்காக விடப்பட்ட காணி .. | 0 0 10 | —† |
| 4 | டிை .. | கே. ஆரோக்கியம் குலாசு .. | துறந்தகாணியும் பறட்டைக்காடும் | 1 1 14 | 35 |
| 5 | வளத்தடித்தோட்டம் .. | ஆரோக்கியம் குலாஸ் கூட்டிப்பிடித்த காணி | ஒரு வயதுள்ள 14 தென்னம் பிள்ளைகள் | 0 0 30 | 50 |
| | | **மன்னார் கிளக்கு. பிளான் இலக்கம் 6,071. குறிச்சி—கோணார்பண்ணை. உரித்தாளி—அரசாட்சியார்.** | | | |
| 1 | வெண்காணி .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 0 15 | —† |
| 2 | டிை .. | கெ. காசிமுகம்மது .. | பறட்டைக்காடுள்ள துறந்தகாணி | 1 3 2 | 60 |
| 3 | டிை .. | — .. | அடிப்பாட்டுக்காக விடப்பட்ட காணி | 0 0 3 | —† |
| | | **இலுப்பைக்கடவை. பிளான் இலக்கம் 5,595. குறிச்சி—இலுப்பைக்கடவை. உரித்தாளி—அரசாட்சியார்.** | | | |
| 2 | வண்ணுவளவு பிட்டி .. | — .. | துறந்த காணி .. | 0 0 13 | 25 |
| 3 | டிை .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 0 3 | —† |
| | | **நானாட்டான் கிளக்கு. பிளான் இலக்கம் 5,573. குறிச்சி—மளவராயன்கட்டை அடம்பன். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | |
| 2 | கலாங்காடு .. | அந்தோனி தொம்மை .. | வேளாண்மைக்கேற்ற காடு .. | 2 0 16 | 21‡ |

* இத்துண்டுகள் கட்டுக்கரைக் குளத்தால் நீர்பாச்சக்கூடியவை. இக்காணிகளை வாங்குவோர்கள் வருஷத்துக்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு ரூபாய் வீதம் நீர்வரி கொடுக்கவேண்டும். இவ்வீதம் அரசாட்சியாரால் தேவையானபொழுது மாற்றப்படும்.

† விற்பனவுக்கல்ல.

‡ இத்துண்டு விற்கப்பட்டது. ஆனால் மிகுதிக்காசு கட்டாததினால் விற்பனவுக்கு போடப்பட்டிருக்கிறது.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்கள் மன்னார் உதவி கவண்மேந்து ஏசண்டரிடத்திலும் படங்கள் அளவுகாரப் பெரியதுரை இடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1924 ம் ஆண்டு மாசி௴ 6 ந் திகதி.

சிசில் கிளமென்தி,
கொலோனியல் சக்கிடேத்தார்.

---

**No. 989, N. P.**—1924 ம் ஆண்டு பங்குனி மாதம் 27 ந் திகதி வியாளக்கிழமை, காலை 11 மணிக்கு மன்னாரில் தன் ஆபிசில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக் உதவி கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது நீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 35 காணித் துண்டுகள், வடமாகாணத்து முசலி, மாந்தைப் பகுதியி லிருக்கின்றன.

நானாட்டான் கிழக்கு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காறனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| | | **பிளான் இலக்கம் 5,626. குறிச்சி—சாம்பான்புளியங்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | |
| 1 | காட்டுக்காணி .. | — .. | வழிக்காக விடப்பட்ட காணி .. | 0 0 33 | —* |
| 2 | டிை .. | வி. ஏ. சாரம்பரிகாரி .. | புதிதாய் துப்பரவுபண்ணப்பட்ட வேளாண்மைக்கேற்ற நிலம் | 4 0 15 | 20† |
| 4 | டிை .. | — .. | ரோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 3 23 | —* |
| 5 | டிை .. | எம். எஸ். டி. சமரமணவாளன் | ஒரு பகுதி துப்பரவுபண்ணப்பட்டது வேளாண்மைக்கேற்றது | 8 1 17 | 20† |
| 6 | டிை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்ட காணி | 0 1 22 | —* |
| | | **பிளான் இலக்கம் 5,594. குறிச்சி—சுண்டிக்குளி உரித்தாளி—அரசாட்சியார்.** | | | |
| 1 | குளக்கட்டடிக்காணி .. | வி. அந்தோனி சாரம் .. | ஒரு பக்கம் துப்பரவுபண்ணப்பட்ட சிறுகாடு வேளாண்மைக் கேற்றது | 5 2 2 | 20† |
| 2 | டிை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டகாணி | 0 1 35 | —* |
| 3 | கிணற்றடிக்கமம் .. | வி. ஏ. சாரம்பரிகாரி கூட்டிப்பிடித்த காணி | தோட்டமும் கற்கிணறும் .. | 0 0 36 | 30† |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காறனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | **பிளான் இலக்கம் 5,559. குறிச்சி—பெரும்பரப்பு. உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | காட்டுக்காணி .. | சுவாம் பேதுறு .. | ஒருபகுதி துப்பரவுபண்ணப்பட்ட காணி | 2 | 1 | 16 | 25† |
| | **மாந்தை தெற்கு.** | | | | | | |
| | **பிளான் இலக்கம் A. E. No. 1 of B. S. P.P. No. 30. குறிச்சி—முதலைகுத்தி. உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | காட்டுக்காணி .. | எஸ். எம். மரிசால் பரிகாரி .. | புதிதாய் துப்பரவுசெய்யப்பட்ட காணி | 2 | 3 | 21 | 20† |
| | **பிளான் இலக்கம் A. E. No. 2 of B. S P. P. 22. குறிச்சி—உயிலங்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | சின்னக்குளத்துக்காணி | பி. ஏமிலி .. | நெற்காணி .. | 3 | 2 | 28 | 32† |
| 2 | பிறவேலி .. | — .. | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி | 0 | 2 | 31 | —* |
| | **பிளான் இலக்கம் 5,571. குறிச்சி—புதுக்கமம். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | காட்டுக்காணி .. | எம். சந்தான் .. | நெல்வயல் .. | 6 | 1 | 15 | 20† |
| 2 | ஷை .. | — .. | வளிக்காக விடப்பட்ட காணி, விற்பனவுக்கல்ல | 0 | 0 | 15 | —* |
| 3 | காட்டுக்காணி .. | — .. | காட்டுக்காக விடப்பட்ட காணி .. | 0 | 0 | 16 | —* |
| | **மாந்தை வடக்கு.** | | | | | | |
| | **பிளான் இலக்கம் A. E. No. 7 of B. S. S. P. 27. குறிச்சி—காத்தான் குளம். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | புதுக்கமம்பிட்டி .. | — .. | றோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 | 0 | 6 | —* |
| 2 | ஷை .. | சூசை சில்வெஸ்டர் .. | 2 ஓலை வீடுகளடங்கிய துப்பரவு பண்ணப்பட்ட காணி | 0 | 3 | 22 | 20† |
| 3 | ஷை .. | — .. | குளக்கட்டுக்காக விடப்பட்டகாணி | 0 | 0 | 27 | —* |
| 4 | ஷை .. | — .. | ஷை .. .. | 0 | 1 | 17 | —* |
| 5 | ஷை .. | விசேந்திபிரகாசம் .. | ஒரு ஓலைவீடுள்ள காணி .. | 1 | 0 | 8 | 20† |
| 6 | சாளபடிக்கமம் .. | எம். பிரகாசம் கூட்டிப்பிடிக்கப் பட்ட காணி | தோட்டம் .. .. | 0 | 1 | 32 | 20† |
| 7 | ஷை .. | — .. | றோட்டுக்காக விடப்பட்ட காணி | 0 | 0 | 3 | —* |
| 8 | சாளம்படிக்கமம் .. | எம். பிரகாசம் கூட்டிப்பிடித்த காணி | நெல்வயல் .. .. | 0 | 3 | 13 | 20† |
| | **பிளான் இலக்கம் 5,597. குறிச்சி—கருங்கண்டல். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | அரிஅந்தம்பிட்டி .. | வி. பிலிப்பு .. | புதிதாய் துப்பரவுபண்ணப்பட்ட காடு | 6 | 1 | 20 | 20† |
| 2 | ஷை .. | ஏ. பிலிப்பும் ஏ. சுலியானும் கூட்டிப்பிடிக்கப்பட்ட காணி | நெல்வயல் .. .. | 0 | 3 | 33 | 20† |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 1 | 6 | 20† |
| | **பிளான் இலக்கம் 5,592. குறிச்சி—ஆலங்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | புளியடிக்கட்டுப்புலவு அல்லது சாளம்பக்குளம் காடு | யோவான்பரிகாரி லாசர் .. | ஷை .. | 0 | 1 | 14 | 25* |
| 2 | ஷை .. | — .. | அளவக்கைக்காக விடப்பட்டகாணி | 0 | 0 | 26 | —* |
| | **A. E. No. 6 of B. S. P. P. No. 27. குறிச்சி—காத்தான்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.** | | | | | | |
| 1 | மணல் காடு அல்லது வெட்டுக்காடு அல்லது பாலையடிக்கட்டுக்கமம் | — .. | வண்டில்பாதைக்கு விடப்பட்ட காணி | 0 | 0 | 16 | —* |
| 2 | ஷை .. | சூசை மனுவல் .. | நெல்வயல் .. .. | 0 | 2 | 17 | 25† |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 3 | 5 | 25† |
| 4 | ஷை .. | — .. | தண்ணீர் பாச்சலுக்காக விடப்பட்ட காணி | 0 | 2 | 5 | —* |
| 5 | ஷை .. | — .. | ஷை .. | 2 | 0 | 31 | —* |
| 6 | ஷை .. | சூசைமனுவல் .. | பறட்டைக்காடு .. | 1 | 2 | 29 | 25† |
| 7 | ஷை .. | — .. | தண்ணீர் ஓட்டத்துக்காக விடப்பட்ட காணி | 0 | 2 | 4 | —* |

* விற்பனவுக்கல்ல.

† இத்துண்டுகள் கட்டுக்கரைக் குளத்தால் நீர்பாச்சப்படக்கூடியவை. இக்காணிகளை வாங்குபவர்கள் வருஷத்துக்கு ஏக்கருக்கு இரண்டு ரூபாய்வீதம் நீர்வரி கொடுக்கவேண்டும். இவ்வீதம் அரசாட்சியாரால் தேவையான பொழுது மாறறப்படும்.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்களை மன்னார் உதவிக் கவண்மேந்து ஏசன்றரிடத்திலும் படங்கள் அளவுக்காரப் பெரியதுரை யிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு, 1924 ம் ஜூ மாசம் 6 ந் உ.

சிசில் கிளமென்தி,
கொலோனியல் சக்கிறத்தார்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தற்போது இருக்கும் கவடிப்பளையின் கிணற்றின் பாதையை அகலமாக்கிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னாச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 7,542. குறிச்சி—கவடிப்பளை சுகாதார சங்கத்திற்குள்பட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | லாகலாவத்த .. | தோட்டம் .. | கா. கநகரட்ணம் .. | .. 0 0 15·4 |
| 5 | ஷை .. | ஷை .. | ஷை .. | .. 0 0 3·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ மாசி மாசம் 29 ந் தேதியிலன்று 1.30 மணிக்கு மாத்தளை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளை கச்சேரி, ஸீ. ஹெரிஸன் ஜோன்ஸ்,
1924 ம் ஸ்ரீ மாசிமீ 2 ந் உ. உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த கக்கூசு கட்டுகிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 308. குறிச்சி—புல்க்தன்டாவை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 98B | அன்னுஸிகொடுவே வத்த | வெண்நிலம் .. | தெனகம பல்லிக்கொன்டகே ஹீன்ஹாமி | .. 0 0 3·6 |
| 104B | கால்லகேதெனிய .. | தோட்டம் .. | (1) பெலிஅத்த விதானபதிறனகே அப்பு, (2) பெலிஅத்த தொன் டேவிட் த சில்வா அபேசூரிய, (3) பெலிஅத்த தொன் மதெஸ் த சில்வா விக்ரமனயக, (4) பெலிஅத்த டொன்மென்டிஸ் த சில்வா விக்கிரமனயக, (5) பெலிஅத்த விலியெம் விக்ரமனயக, (6) பெலிஅத்த அகலப்பத்திகே அர்னோலிஸ் சில்வா, (7) பெலிகள்ள புன்சிஹேவாகே தென் அந்திரிஸ், (8) கம்புஸ்ஸாவழ வழ்கமகொடிதுவக்குகே ஹென்திரிக் அப்பு, (9) கம்புஸ்ஸாவழ அமறஸேகற விதான பதிரனகே அந்திரிஸ், (10) கம்புஸ்ஸாவழ வழ்கம கொடிதுவக்குகே குருஸின் அப்பு, (11) கம்புஸ்ஸாவழ வழ்கம கொடிதுவக்குகே மழ்ஹாமி, (12) கம்புஸ்ஸாவழ பரஹற கிறின்திகே சுவானிஸ் அப்பு | 0 0 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ மார்சு மாசம் 12 ந் தேதியிலன்று 2 மணிக்கு தங்காலை தாநாயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்மாந்தோட்டைக் கச்சேரி, ஏ. எச். ஈகன்,
1924 ம் ஸ்ரீ ஜனவரிமீ 31 ந் உ. உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த கக்கூஸ் ஒன்று கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 12,404. குறிச்சி—தங்காலை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | றுகயாகேவத்த .. | 40 வயசு தென்னமரம் 1, 5 வயசு தென்ன மரம் 2, 2 வயசு தென்னமரம் 1 | சீ. அஸ். அபேவீற | .. 0 0 5·16 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ மார்ச்சு மாசம் 12 ந் தேதியிலன்று 2 மணிக்கு தங்காலை தாநாயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டை கச்சேரி, ஏ. எச். ஈகன்,
1924 ம் ஸ்ரீ ஜனவரிமீ 31 ந் உ. உதவி அரசாட்சி ஏசண்டு.

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இலக்கம் 8,517, கொழும்பு.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெனா உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1924 ம் ஷு (பெபுருவரி) மாசிமீ 8 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகஸ்த்தர் எல். எல். கண்ரர், துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணி முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எல். எல் கண்ரர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக்குள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணியின் விபரம்.

மேல்மாகாணம் கொழும்பு டிஸ்த்திறிக் அலுத்குறுகோறளை தெற்கைச்சேர்ந்த ருகம்பத்துவவில் பட்டுவத்தை என்னும் கிராமத்தி லித்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 16135 ம் பிரதமபடத்திலே 19 ஆங் காணித்துண்டாய்க் காட்டப்பட்டு 3·62 பேட்சு விசாலங் கொண்டதும் பொதுவாக கோங்காவத்தை என்னும் பெயரினு லறியப்பட்டு அல்லது அழைக்கப்படுவதுமான காணித்துண்டு. எல்லைகளாவன: வடக்கு-அய். விசகாமியும் மறுபேருமுருத்தாடும் கோங்காவத்தை, கிழக்கு- இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் றெயில்வே சேமிப்பு, தெற்கு- இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் றெயில்வே சேமிப்பு, இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே வுருத்தாடும் மடகாவத்தை, (சயகொடி ஆராச்சிகே சொறொனிஸ்அப்பு கூட்டிப்பிடித்த); மேற்கு-அய். விசகாமியும் மறுபேருமுருத்தாடும் கோங்காவத்தை.

* இங்கிலீசின் மூன்ரும் பாகம் 130 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[கொழும்பு வி. உ. 5—1924.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,518, கொழும்பு.]

இதன்பின் சொல்லப்படுங் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெனா உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால் அவர்கள், 1924 ம் ஷு (பெபுருவரி) மாசிமீ 8 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எல். எல். கண்ரர் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாதாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கண்ரர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக்குள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணியின் விவரம்.

மேல்மாகாணம் கொளும்பு டிஸ்திறிக் சியனே கோறளை மேற்கு மெதபத்துவ ஓறுதொட்டக் கிராமத்தி லிருக்குமித்துட னிணைக்கப்படும் பட்டப்பிரதியில்* விவரித்தபடியே 16,121 ம் பிரதமபடத்திலே 19 ஆங் காணித்துண்டாய்க் காட்டப்பட்டு 12·50 பேட்சு விசாலங்கொண்டதும் பொதுவாக கோங்காவத்தை என்னும் பெயரினு லறியப்பட்டு அல்லது அழைக்கப்படுவதுமான காணித்துண்டு. இதற் கெல்லைகளாவன: வடக்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே யுருத்தாடும் கோங்காவத்தை; கிழக்கும் தெற்கும்-எ. சியதோறிஸ் பெறேருவும் இன்னு மொருவரு முருத்தாடும் கோங்காவத்தை; மேற்கு-இலங்கை அரசாட்சியாரின் றெயில்வே யுருத்தாடும் றெயில்வே சேமிப்பு.

* இங்கிலீசின் மூன்ரும் பாகம் 130 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[கொழும்பு வி. உ. 6—1924.]

---

[அறிவித்தல் இலக்கம் 8,519, கொழும்பு.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டெனா உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1924 ம் ஷு (பெபுருவரி) மாசிமீ 8 ந் தேதி துவககம் மூன்று மாசத்திற்குள் 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எல். எல். கண்ரர் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எல். எல். கண்ரர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின விவரம்.

மேல்மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திறிக் கபிற்றிகம்கோறளே யற்றிககாபத்துவ போகலகம பனவல்லந்தக் கிராமத்தி லுள்ள இத்துடன் அணைத்திருக்கும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 16,150.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 13 | பக்மிகாகும்புற | 0 0 6 |

